Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

Spl.S.C.No.107/2025

Dated 05-03-2026
Deposition of witness for : PW 17 ( LW 18)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வி | வயது | : | 53 |
| தந்தை பெயர் | : | ராஜேந்திரன் ் | தாலுக்கா | : | திருவாரூர் |
| கிராமம் | : | திருவாரூர் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் சி.பி.சி.ஐ. டி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 2014 ம் ஆண்டு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது நி.கு.எண்.5/2014 வழக்கினை 17.11.2014 ம் தேதி பதிவு செய்து

பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டும் தொடர்ந்து விசாரணைக்காக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு ரத்தினவேல் அவர்கள் ஒப்படைத்த மேற்படி வழக்கு கோப்பை உத்தரவுப்படி 18.11.2014 ம் தேதி நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

3) வழக்கு கோப்பை பார்வையிட்டும் சம்பவ இடத்தை பார்வையிட்டும் ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சரிபார்த்தேன். அன்றைய தினமே சாட்சிகள் அபுதாகிர், மோகன், ராஜா ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது விசாரணையின்போது சாட்சி அபுதாகிர் 4.6.2014 மற்றும் 24.6.2014 தேதியிட்ட பசலி தொகை கட்டியதற்கான அசல் ரசீதுகள் மற்றும் நுழைவு கட்டணம் மற்றும் இடத்தை அளந்தற்கான கட்டணம் கட்டிய 8.9.2014 தேதியிட்ட அசல் ரசீதுகளை விசாரணைக்கு ஆஜர் படுத்தினார்.

4) 19.11.2014 ம் தேதி சாட்சிகள் தாமோதரன், ஞானசேகரன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

5) 25.11.2014 ம் தேதி சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, கணேசன், ராஜா, கருப்புசாமி ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

6) 1.12.2014 ம் தேதி சாட்சிகள் அபுரோஜாபீவி, ஜரினாபேகம், ஷாஜஹான், ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

7) 8.12.2014 ம் தேதி சாட்சி திருமால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த சாட்சி எனது விசாரணையின்போது ஜரினாபேகம் என்பவரது மனு கோப்பு மற்றும்

அவற்றிக்கு வழங்கிய அனுமதி ஆணைகள் அபுர்ரோஜாபீவின் மனு கோப்பு மற்றும் அதற்கு வழங்கிய அனுமதி ஆணைகள் ஜரினாபேகம் 5.12.2014 ம் தேதி கட்டிய பசலி தொகை மற்றும் நுழைவு கட்டணத்திற்கான ரசீதுகளின் சான்றிட்ட நகல்களையும் விசாரணைக்கு ஆஜர் படுத்தினார்.

8) 6.1.2015 ம் தேதி சாட்சி ஜெயராமனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.1.2015 ம் தேதி தடய அறிவியல் துறையில் இருந்து பெறப்பட்ட அறிக்கை தொடர்பாக சாட்சி விஜயலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.1.2015 ம் தேதி சாட்சி கூடுதல் காவல் கண்கணிப்பாளர் ரத்தினவேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

9) வழக்கின் விசாரணை முடித்து வழக்கில் இசைவாணை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பேரில் பெறப்பட்ட உத்தரவுப்படி அப்போதைய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு சுப்பையன் அவர்களிடம் 26.5.2015 ம் தேதி வழக்கு கோப்பு மற்றும் அனைத்து ஆவணங்களையும் பரிசீலனைக்காக ஆஜர் படுத்தினேன்.

10) 4.6.2015 தேதியிட்ட இசைவாணை பெறப்பட்டது தொடர்பாக சாட்சி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு சுப்பையன் அவர்களை 6.7.2015 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

11)இவ்வழக்கில் என் விசாரணை முடித்து எதிரி மீது 7.7.2015 ம் தேதி குற்ற அறிக்கை

தாக்கல் செய்தேன்.

12) வழக்கின் விசாரணையின்போது நான் கைப்பற்றிய ஆவணங்கள் நான் சத்திரம் தாசில்தாருக்கு அனுப்பி கடிதம் இதுதான். அது **அ.சா.ஆ.33** ஆகும். சத்திரம் தாசில்தார் எனக்கு அனுப்பிய ந.க.எண்.907/2014 நாள் 8.12.2014 தேதியட்ட கடிதம் இதுதான். அது **அ.சா.ஆ.34** ஆகும். மீண்டும் சத்திரம் தாசில்தார் நிர்வாகம் திரு மனோகர் அவர்கள் ந.க.எண்.89/2015 நாள் 4.2.2015 தேதியிட்டு எனக்கு அனுப்பிய கடிதம் இதுதான். அது **அ.சா.ஆ.35** ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) இசைவாணை வழங்கும் அதிகாரிக்கு வரைவு இறுதி குற்ற அறிக்கை நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். ( மீண்டும் சாட்சி மாற்றி வரைவு குற்ற அறிக்கையை அனுப்பினேன் என்றும் வரைவு இசைவாணையைதான் அனுப்பவில்லை என்று கூறுகிறார்.)

2) வரைவு மாதிரி இறுதி குற்ற அறிக்கையை இசைவாணை வழங்கும் அதிகாரிக்கு அனுப்பிய தேதியில் பினாப்தலின் அறிக்கை என்னால் பெறப்பட்டுவிட்டதா என்றால் பெறப்பட்டுவிட்டது.

3) குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தேதி என்ன என்றால் 7.7.2015 ஆகும். 7.7.2015 அன்று குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டேன்.

4) ஞானசேகரன் என் விசாரணையில் பொறிவைப்பு நடவடிக்கை எடுத்த தேதிக்கு முன்பு வரை சம்பந்தப்பட்ட இடங்களை எதிரி தாசில்தார் கள ஆய்வு மேற்கொண்டாரா என கூறியிருக்கிறாரா என்றால் இல்லை.

5) இதே போல் சாட்சிகள் அ.சா.11 கிருஷ்ணமூர்த்தி, அ.சா.12 கருப்பு சாமி ஆகியோர்கள் என் விசாரணையில் பொறிவைப்பு நடவடிக்கை எடுத்த தேதிக்கு முன்பு வரை சம்பந்தப்பட்ட இடங்களை எதிரி தாசில்தார் கள ஆய்வு மேற்கொண்டாரா என கூறியிருக்கிறார்களா என்றால் இல்லை.

6) இந்த சம்பவ காலத்தில் சத்திரம் நிர்வாக சம்பந்தப்பட்ட நிலங்கள் குறித்து பகுதி தொகை, மற்றும் தரை வாடகை உயர்த்தி வசூலிக்கப்படவேண்டும் என்று மாவட்ட ஆட்சியரால் உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் அந்த தொகை பெரிய அளவிலான தொகை கிடையாது. முதலில் வசூல் தொகை எவ்வளவு என்றும் மற்றும் மாவட்ட ஆட்சியர் உத்தரவிற்கு பிறகு வசூல் செய்த தொகை எவ்வளவு என்றால் 1423 பசலி வரை இவ்வழக்கின் வாதி சம்பந்தப்பட்ட இடத்திற்கு 4 வருட நிலுவை தொகை ரூ-1405/- புது நிர்ணய படி வாதியின் தாயார் அபுர்ரோஜாபீவிக்கு ரூ.766/ மற்றும் வாதியின் அண்ணன் ஷாஜஹானுக்கு ரூ.702/ ஆகும். இது மாத தரை வாடகையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

7) இவ்வழக்கு புகார் படி அபுதாகிர் தன் தாயார் அபுர்ரோஜாபீவி குடியிருக்கும் இடத்திற்கு மாறுதல் செய்ய அனுமதி கோரி எதிரி தாசில்தாரிடம் மனு கொடுத்திருந்தார் என்றும் அதற்காகதான் எதிரி பணம் கேட்டதாக வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால்

இவ்வழக்கின் வாதி அபுதாகிர் குடியிருந்த கூரை வீட்டினை கான்கிரிட் வீடாக மாற்றிக்கொள்ள கேட்கப்பட்ட அனுமதி தொடர்பான வழக்காகும்.

8) ஷாஜஹானுக்கோ ஜெரினாபேகத்திற்கோ வீடு கட்ட அனுமதி கேட்டதாகவும் அதற்காக எதிரியால் பணம் கேட்கப்பட்டதாகவோ புகாரும் இல்லை வழக்கும் இல்லை என்றால் சரியல்ல.

9)எனது குற்ற இறுதி அறிக்கையில் என்ன விபரங்கள் நான் எழுதியுள்ளேன் என்பது எனக்கு தெரியும்.

10) பொதுவாக பொதுஊழியர் லஞ்சம் கேட்டால் அவர் மீது புகார் பெறப்பட்டால் அது குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரிதான்.

11) இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்து சம்பந்தமான உரிமை குறித்து அவர்களுக்கு பெற்று தரவேண்டியது எங்களுடைய கடமை அல்ல என்றால் சரிதான்.

12) இந்த வழக்கில் திருமால் என்ற தாசில்தாரை என் விசாரணையின்போது விசாரித்து உள்ளேன்.

13)பொறிவைப்பு நடவடிக்கைக்கு பிறகு போலிசாரின் வேண்டுகோளின் படி அந்த மூன்று நபர்கள் மீது எந்தவிதமான சட்ட விதிகளையும் அனுசரிக்காமல் மூன்று நபர்களுக்கும் அவர்கள் கேட்ட இடத்திற்கு போலிசாரின் அறிவுறுத்தலின்பேரில் ஆணை வழங்கியுள்ளார் என்றால் தவறு.

14) நான் சொன்னதுபோல் இசைவாணை வழங்கிய அதிகாரியை நான் ஆவணங்களோடு

போய் சந்திக்கவில்லை என்றும் அவரிடம் எந்தவிதமான கருத்து பரிமாற்றமும் செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல.

15) நான் விசாரித்த சாட்சிகளிடம் எங்கு வைத்து விசாரணை செய்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது என்றால் எங்களது அலுவலகத்திலோ அல்லது அவர்கள் வசிக்கும் பகுதிகளில் வைத்து விசாரணை மேற்கொண்டேன். சாட்சிகளின் வாக்குமூலத்தில் அவர்கள் எந்த இடத்தில் வைத்து விசாரிக்கப்பட்டார் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சொல்லப்பட்டுள்ளது.

16) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்ப காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் முறையான விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது ஒரு பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.05 16:27:15 +0530